# சுமார் 640 ஏக்கர் பரப்பளவு கள்ளப் பெரம்பூர் ஏரியைச் சீரமைத்து தஞ்சை மாநகர நிலத்தடி நீரை உயர்த்துவீர்!

# தி.மு.க. ஆட்சியில்தான் உள்ளாட்சித் துறைகள் மிகச்சிறப்பாக இயங்கின!

## சட்டப் பேரவையில் – திருவையாறு துரை. சந்திரசேகரன் பேச்சு!

சென்னை, ஆக. 22-

**சட்டப்பேரவையில் மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் பேசிய திருவையாறு தொகுதி கழக உறுப்பினர் துரை. சந்திரசேகரன், "தி.மு.க. ஆட்சிக் காலத்தில்தான் உள்ளாட்சித் துறைகள் மிகச் சிறப்பாக இயங்கின!" எனப் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

சட்டப் பேரவையில் அவர் பேசியதாவது:-

பேரவைத் தலைவர் அவர்களே, பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், அறிவுலக ஆசான் பேரறிஞர் அண்ணா, நவீன தமிழகத்தின் சிற்பி முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட மாடல் நாயகர் கழகத் தலைவர் அவர்களுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் எங்களுடைய இளந்தலைவர் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாமன்றத்தில் உள்ள அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருவையாறு தொகுதியில் 1989 ஆம் ஆண்டு முதல் தொடங்கி ஐந்து முறை என் நெஞ்சம் நிறைந்த தலைவர் ஐயா கலைஞர் அவர்களும், அதன்பின் கழகத் தலைவர் அவர்களும், இளந்தலைவர் அவர்களும் மூன்று முறை என மொத்தம் எட்டு முறை கழகத்தின் சார்பாக போட்டியிடுவதற்கான வாய்ப்பினை வழங்கினார்கள். ஆறாவது முறையாக வெற்றி பெறுவதற்காக எனக்காக தேர்தல் பிரச்சாரம் செய்த எங்கள் கழகத் தலைவர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வெற்றிக்கு துணை நின்ற கழகத்தினுடைய முதன்மைச் செயலாளர் அண்ணன் கே.என். நேரு அவர்களுக்கும், மேனாள் மத்திய அமைச்சர் அண்ணன் பழனிமாணிக்கம் அவர்களுக்கும், தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் தம்பி முரசொலி அவர்களுக்கும், கூட்டணி கட்சியின் தோழர்களுக்கும், கழகத்தின் ஒன்றியச் செயலாளர்கள், பேரூர் செயலாளர்கள், கழக நிருவாகிகள், திருவையாறு தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2026-2027 ஆம் ஆண்டுக்கான நீர்வளத் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மற்றும் சுற்றுலாகலை மற்றும் பண்பாடு ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய கருத்துகள் சிலவற்றை எடுத்துவைக்க விரும்புகின்றேன்.

### உலகப் பாரம்பரிய பாசனக் கட்டமைப்பு விருது!

தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக கடந்த ஐந்தாண்டுகளில் சிறப்பான திராவிட மாடல் ஆட்சியை நடத்திய எங்களுடைய தலைவர் காலத்தில் நீர்வளத் துறைக்கு 2022 ஆம் ஆண்டில் சர்வதேச நீர்ப்பாசனம் மற்றும் வடிகால் ஆணையம் ICID, காளிங்கராயன் அணைக்கட்டு, வாய்க்கால் அமைப்பு, கல்லணை, வீராணம் ஏரி, கொள்ளிடம் கீழ் அணைக்கட்டு ஆகிய 4 கட்டமைப்புகளுக்கு உலகளவில் அங்கீகாரம் அளித்து தமிழ்நாடு நீர்வளத் துறைக்கு உலகப் பாரம்பரிய நீர்ப்பாசன கட்டமைப்பு விருதுகள் வழங்கப்பட்டிருக்கின்றது. அதேபோல, மத்திய நீர்ப்பாசன மற்றும் எரிசக்தி வாரியம் CBIP விருது 2022 ஆம் ஆண்டில் கச்சமங்கலம் என்ற என்னுடைய தொகுதியிலுள்ள அணைக்கட்டுக்கு சிறந்த திட்டம், சிறந்த கட்டுமானப் பணிப் பராமரிப்புக்கான விருது மத்திய நீர்ப்பாசன மற்றும் எரிசக்தி வாரியத்திடமிருந்து வழங்கப்பட்டது. 2025 ஆம் ஆண்டில் சர்வதேச நீர்ப்பாசனம் மற்றும் வடிகால் ஆணையம் ICID செய்யாறு அணைக்கட்டு, கொடிவேரி அணைக்கட்டு மற்றும் வாய்க்கால் அமைப்பு, நொய்யல் ஆறு முறைசாரா அமைப்பு—ஆகிய மூன்று கட்டமைப்புகளுக்கு உலகளாவிய அங்கீகாரம் அளிக்கப்பட்டு, தமிழ்நாடு நீர்வளத் துறைக்கு உலகப் பாரம்பரிய பாசனக் கட்டமைப்பு விருது வழங்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து கடந்த ஐந்தாண்டுகளாக இந்த நீர்வளத் துறைக்கு எங்களுடைய முதலமைச்சராக இருந்த திராவிட மாடல் நாயகர் 2021-2022 ஆம் ஆண்டிற்கு 6,607 கோடி ரூபாயும், 2022-2023 ஆம் ஆண்டில் 7,338.36 கோடி ரூபாயும், 2023-2024 ஆம் ஆண்டில் 8,208.21 கோடி ரூபாயும், 2024-2025 ஆம் ஆண்டில் 8,398 கோடி ரூபாயும், 2025-2026 ஆம் ஆண்டில் 9,460 கோடி ரூபாயும் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார். சென்ற இடைக்கால பட்ஜெட்டில் 2026-2027 ஆம் ஆண்டில் 10,076 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

நம்முடைய நீர்வளத் துறை அமைச்சர் அவர்களிடம் நான் கேட்க விரும்புவது— தற்போதைய பட்ஜெட்டில் நீர்வளத் துறைக்கு 9,267 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கடந்த முறையைக் காட்டிலும், கிட்டத்தட்ட 8 சதவிகிதம் குறைவாக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை தங்கள் கவனத்திற்கு கொண்டுவருகிறேன். நீங்கள் அதிகமாக அதில் கவனம் செலுத்த வேண்டும்.

அதேபோல, மேட்டூர் அணையைப் பொறுத்தவரையில், கடந்த ஐந்தாண்டுகளில் எங்களுடைய திராவிட மாடல் ஆட்சியில், எங்களுடைய தலைவருடைய ராசிக்கு—மேட்டூர் அணையானது 2021 ஆம் ஆண்டு 12.6.2021 அன்று நாங்கள் திறந்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) 2022 ஆம் ஆண்டில் 24.5.2022 அன்று நீர் இருப்பு காரணமாக முன்கூட்டியே திறந்திருக்கிறோம். 2023 ஆம் ஆண்டில், ஜுன் 12 ஆம் நாளன்று திறந்திருக்கிறோம். 2024 ஆம் ஆண்டில் 2872024 அன்று திறந்திருக்கிறோம். 2025 ஆம் ஆண்டில் 12.6.2025 அன்று திறக்கப்பட்டது. அன்றைய முதலமைச்சராக இருந்த தளபதி அவர்கள், மேட்டூரிலே 12.6.2025 அன்று மேட்டூரிலே தண்ணீர் திறந்து, அதிலிருந்து ஒருவாரத்திற்கு பிறகு அந்த தண்ணீர் கல்லணையை அடைந்த பிறகு, கல்லணையையும் திறந்து வைத்தார். ஒரு முதலமைச்சர் இந்த இரண்டு அணைகளிலும் தண்ணீர் திறந்த பெருமை எங்களுடைய தலைவருக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி)

தற்போது மேட்டூரில் நீர் வறண்டிருப்பதால், தற்போது திறக்கப்படவில்லை. இதை அரசின் கவனத்திற்கு கொண்டுவருகிறேன்.

காவிரி பிரச்சினையில் adamant ஆக மாதாந்திர நீர் பங்கீடு இதுவரையில் கொடுக்கவில்லை, கொடுக்க முடியாது என்று சொல்கிறார். அதற்காக நம்முடைய அரசு எடுத்த நடவடிக்கை என்ன? நாம் மென்மையாக செல்கிறோம் என்பது என்னுடைய கருத்து. த.வெ.க. அரசு, முதலமைச்சர் அவர்கள், துறையினுடைய அமைச்சர் மிகவும் soft ஆக செல்கிறீர்கள் என்பது என்னுடைய கருத்து. நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய பயணத்தை யார் முடிவு செய்ய வேண்டும்? முதலமைச்சர் அவர்களுடைய அலுவலகம் முடிவு செய்ய வேண்டும், முதலமைச்சர் முடிவு செய்ய வேண்டும். ஆனால், 3 ஆம் தேதி தமிழ்நாடு முதலமைச்சர் வருகிறார் என்று கர்நாடகாவின் முதலமைச்சர் சொல்கிறார். அது எந்தவிதத்தில் நியாயம், அதை எப்படி நீங்கள் விட்டுக்கொடுக்கிறீர்கள், அது நியாயத்திலேயே வராது. நமக்கென்று ஒரு prestige இருக்கிறது. நான் இப்போதும் சொல்கிறேன், முதலமைச்சர் அவர்கள் அன்றைக்குக்கூட உருக்கமாக சொன்னார். நான் எந்த அவமானத்தையும் தாங்க தயாராக இருக்கிறேன் என்று கூறினார். அவமானப்பட வேண்டிய அவசியம் இல்லை. அப்படி தமிழக முதலமைச்சர் அவர்கள் அவமானப்பட்டால் தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு குடிமகனும் அவமானப்படுகிற மாதிரி. நீங்கள் பயப்படாமல், சில அரசியல் சூழ்நிலைகளைக் கருதி, காங்கிரசையும் பகைத்துக்கொள்ளக் கூடாது, BJPயும் பகைத்துக்கொள்ளக் கூடாது என்றெல்லாம் பார்க்கக் கூடாது. முதலமைச்சர் மக்கள் செல்வாக்கு இருக்கிறது என்று நீங்கள் நினைக்கிறீர்கள். அப்படியிருக்கையில் ஏன் பயப்பட வேண்டும்? நமக்கான தண்ணீரை நியாயமாகக் கேளுங்கள். (குறுக்கீடு)

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாம் நிதிப் பங்கீட்டில் கொஞ்சம் கவனமாக இருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கவலை. நான் டெல்டா விவசாயி என்கிற முறையில் சொல்கிறேன். எங்களுக்கு பாதிப்பு இருக்கிறது.

முதலமைச்சர் அவர்கள் 5 மார்ச் 2025 அன்று ஒரு அருமையான அறிக்கையை வெளியிட்டார். நான் அந்த அறிக்கையைப் படித்திருக்கிறேன். அதை வைத்திருக்கிறேன். அதில் என்ன சொல்கிறார் என்றால், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களின் பற்றாக்குறை என்பதெல்லாம் மக்கள் பிரச்சினையே இல்லை. அதைவிட மிக முக்கியமான ஜனநாயகம் சார்ந்த பிரச்சினைகள் நாட்டில் இருக்கின்றன. அவற்றைக் களைவதுதான் நமது முதன்மைப் பணியாக இருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். ஆனால், இப்போது அதே முதலமைச்சர் அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கூட்டி, இன்னும் தொகுதி மறுவரையறையே Parliamentல் சொல்லவில்லை, இவர் முன்கூட்டியே கூட்டம் போட்டு, அந்த கவனத்தை மேகதாதுவில் அணைக்காகவோ, காவிரிப் பிரச்சினையில் தண்ணீர் விடவில்லை என்பதற்காக நடத்தவில்லை என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. இதைவிடக் கொடுமை முதலமைச்சர் அவர்கள் மௌனமாக இருக்கிறார்.

அந்தக் காவிரிப் பிரச்சினை குறித்துப் பேசுவதை விட்டுவிடுகிறேன். நீர்வளத் துறையில் வடவாறு, வெண்ணாறு, வெட்டாறு, குடமுருட்டி, காவிரி என்று 5 நதிகள் ஓடுவதால்தான், திருவையாறு சிவனுக்கு பஞ்சநதீஸ்வரர் ஐயாறப்பர் என்ற பெயரும், ஊருக்கு திருவையாறு என்கிற பெயரும் வந்தது. உலகில், ஓடுகின்ற நதிக்கு முதலில் கட்டிய அணை கல்லணை, கட்டியவர் நம்முடைய கரிகால் பெருவளத்தான். அதன் பின்னர்தான் நைல் நதியில் கட்டுகிறார்கள். வேறு எங்கும் இல்லாத ஒரு சிறப்பு கல்லணைக்கு இருக்கிறது. அங்கு கருங்கல் எதுவும் கிடையாது, கருங்கல் மலை கிடையாது. அவ்வளவு பெரிய அணையை மிகச் சிறப்பாக கட்டிய பெருமை நம்முடைய கரிகால் பெருவளத்தான் அவர்களுக்கு உண்டு.

இன்றைக்கும் சிறப்பாக அந்த அணையைப் பராமரிக்கின்றனர். அந்த அணையைக் கட்டியதற்குப் பிறகுதான் டெல்டா பகுதி மிக வளமான பகுதியாக, பல்வேறு ஆறுகளாகப் பிரித்து, மிகச் சிறப்பான ஒரு நீர்ப்பாசன மேலாண்மையை கரிகால் பெருவளத்தான் செய்திருக்கிறார். அதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். கல்லணையிலிருந்து காவிரி, வெண்ணாறு, கல்லணைக் கால்வாய் கொள்ளிடம் ஆறுகள் பிரிந்து பாசனப் பகுதிகள் ஆரம்பிக்கின்றன. திருவையாறு தொகுதியில் மட்டும்தான் 5 divisions. அதாவது குறிப்பாக, காவிரி கோட்டம், வெண்ணாறு கோட்டம், கல்லணைக் கால்வாய் கோட்டம், அக்னியாறு கோட்டம் மற்றும் ஆற்றுப் பாதுகாப்புக் கோட்டம் ஆகிய 5 பராமரிப்புக் கோட்டங்கள் உள்ளன.

ஆற்றுப் பாதுகாப்புக் கோட்டத்தில் உள்ள கட்டளை மேட்டு வாய்க்கால் மிக முக்கியமாக நம்முடைய காவிரி ஆற்றிலிருந்து கரூர் மாவட்டத்தில் மாயனூரில் பிரிகிறது. கிட்டத்தட்ட 135 கி.மீ. தூரத்திற்கு அந்த வாய்க்கால் ஓடி தஞ்சாவூருக்கு வருகிறது. கரூர், திருச்சி, தஞ்சாவூர் மாவட்டங்களில் பாசனப் பரப்பை ஏற்படுத்துகின்றது. கடைமடை பகுதியான தஞ்சாவூரில், பூதலூர் தஞ்சாவூர் ஒன்றியப் பகுதியில் கிட்டத்தட்ட 63 பெரிய ஏரிகள் இருக்கின்றன. பெரிய ஏரிகள், சிறிய ஏரிகள் அனைத்தும் இருக்கின்றன. ஆண்டாண்டிற்கும் எங்களுக்குப் பெரிய பாதிப்பு என்னவென்றால், திருச்சி மாவட்டத்திலும் கரூர் மாட்டத்திலும் விவசாயம் மூன்றுபோகமும் செய்வார்கள்; tail end ஆன நம்முடைய தஞ்சை மாவட்டத்திற்கு தண்ணீர் வருவதேயில்லை.

இது ஆண்டாண்டுகாலமாக நடைபெறுகிறது. கிட்டத்தட்ட 4,295 ஏக்கர் ஆண்டுதோறும் விவசாயம் செய்யாமல் தடைபடுகிறது. இதற்குக் காரணம், இந்தப் பாசன வசதியைப் பெறுவதற்கு என்ன செய்யலாம் என்றால், அந்த வாய்க்காலில் 250 கன அடி தண்ணீர் எடுத்தாலே, வாய்க்கால் உடைந்துவிடுகிறது. ஆகையால், 250 கன அடிக்குக் கீழேதான் எடுக்கிறார்கள். Tankஐ fill செய்ய முடியவில்லை அதற்குள் வருடம் முடிந்துவிடுகிறது. என்னுடைய வேண்டுகோள் என்னவென்றால், அந்த வாய்க்காலில், வாய்க்காலினுடைய இயல்பு கொள்ளளவான 1,000 கன அடி வர வேண்டும். அதற்காக, நீங்கள் ஒரே stretch ஆக ரூ.500 கோடி, ரூ.600 கோடி செலவு செய்ய முடியாது. நான் நிதிநிலைமையை புரிந்து சொல்கிறேன். 3 phase ஆகவோ அல்லது 4 phase ஆகவோ செய்யலாம். அந்த 1,000 கன அடி வருவதற்கு புதிய கட்டளை மேட்டு வாய்க்காலை நீங்கள் சீர்செய்து கொடுத்தால், தஞ்சை மாவட்டடத்தில் விளைகின்ற நெல், அத்தனை டெல்டா மாவட்டத்திற்கும் உணவு உற்பத்தியை நிச்சயமாக பெருக்கும். இது கிட்டத்தட்ட பெரிய scheme. அதை அரசின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.



### ஆற்றுப்பாசன வாய்க்கால் புனரமைப்பு!

அதேபோல, ஆற்றுப்பாசன வாய்க்கால் கோட்டத்தில் மற்றுமொரு பாசன வாய்க்காலான உய்யக்கொண்டான் வாய்க்கால் இருக்கிறது. அதில் ரூ.15 கோடி கொடுத்து, 2 phases வேலை நாங்கள் பார்த்திருக்கிறோம். எங்களுடைய அன்றைய முதலமைச்சர் அவர்கள், தஞ்சாவூர் அரசு விழாவிற்கு வந்தார்கள். அப்போது 6 schemes அறிவித்தார்கள். அதில் ஒரு scheme தான் உய்யக்கொண்டான் வாய்க்காலைச் சீரமைக்கின்ற பணி. ரூ.15 கோடி செலவில் இப்போது வேலை நடந்துகொண்டிருக்கிறது. அதில் ஒரு stretch, மூன்றாம் phase நடக்கவில்லை. மூன்றாம் phaseஐ நாங்கள் அறிவிக்கவில்லை. அந்தப் பணியினை, சாயல்குடி ஏரியிலிருந்து வீரமரசன்பேட்டை கிராமத்திலுள்ள சேராண்டி ஏரி வரை, மூன்றாம் நீட்டிப்பு பாசன வாய்க்காலை concrete lining செய்து புனரமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆற்றுப்பாசன கோட்டத்திலுள்ள மிகப் பெரிய ஏரியான, சொரக்குடிபட்டி ஏரி என்று ஓர் ஏரி இருக்கிறது. அது என்னவென்றால் தண்ணீர் வந்தவுடன் அந்த ஊரே பயந்துகொண்டே இருக்கும். என்னக் காரணம் என்றால், borderல் தாழ்வாக இருக்கிறது; தண்ணீர் ஏற, ஏற இரவு நேரங்களில் விளக்கு வைத்துக் கொண்டு காவல் பார்ப்பார்கள். எனவே, அதற்கு தடுப்புச் சுவர் அமைத்து, சொரக்குடிபட்டி பெரிய ஏரியை ஆழப்படுத்தி, அது கிட்டத்தட்ட 650 ஏக்கர் பரப்பளவுள்ளது. அதை நம்முடைய அரசின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். அதேபோல, என்னுடைய மிக முக்கியமான கோரிக்கையை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

## தடுப்புச் சுவர் அமைத்து - 650 ஏக்கர் பரப்பளவுள்ள சொரக்குடிபட்டி பெரிய ஏரியை ஆழப்படுத்துவீர்!

திருச்சி மாவட்டத்தில் எங்களுடைய தலைவர் முதலமைச்சராக இருந்தபோது ஒரு தடுப்பணை கட்டினார்கள். அந்தத் தடுப்பணையைக் கட்டிய பிறகு, திருச்சி மாவட்டத்திற்கு மேற்கே இருக்கின்ற பகுதிகளின் நிலத்தடி நீர் மிக செறிவாக ஏற்பட்டு, பல கூட்டுக் குடிநீர் திட்டங்கள் சிறப்பாக இயங்குகின்றன. அதுமட்டுமல்ல, கிராமங்களில் நிலத்தடி நீர்மட்டம் ஏறியிருக்கிறது. ஆனால், கல்லணையிலிருந்து பார்த்தீர்களென்றால், என்னுடைய தொகுதியின் அணைக்குடி வரை கிட்டத்தட்ட 40 கிலோ மீட்டர். அந்த 40 கிலோ மீட்டரில் 39 கூட்டுக் குடிநீர் திட்டங்கள் இலால்குடி, பேராவூரணி, பட்டுக்கோட்டை, அறந்தாங்கி, புதுக்கோட்டை இவ்வாறு பல்வேறு ஊர்களுக்கு பல ஆட்சிக்காலத்தில், செல்வி. ஜெ. ஜெயலலிதா அவர்களின் ஆட்சிக்காலத்தில் போட்டார்கள். அதன்பிறகு கலைஞர் அவர்களின் காலத்தில் போட்டார்கள்.

### நிலத்தடி நீர் மட்டம்

இப்போது, எங்களுடைய தலைவர் அவர்களின் காலத்தில் திருவாரூருக்கு போட்டார்கள். எங்களுக்கு என்ன பெரிய விஷயம் என்றால், நாங்கள் ஒரு 10, 15,நான் 1989ல் முதன்முதலில் MLA ஆனபோது, கிராமங்களில் போனால் 15 அடி. காலையில் ஒருவர் செல்கிறார் என்றால், borewell போட்டு தண்ணீர் எடுத்துவிடுவார். 15 அடிதான் நீர்மட்டத்தின் உயரம். இன்றைக்கு 150 முதல் 200 அடி வரை சென்றுவிட்டது. காரணம் எல்லோரும் இந்தக் கூட்டுக் குடிநீர் திட்டத்திற்காக எல்லா இடங்களிலும் borewells போட்டு பெரிய, பெரிய ராட்சத borewells போட்டு அந்தத் தண்ணீரை உறிஞ்சியதால், இன்றைக்கு நிலத்தடி நீர் மட்டம் கீழே சென்றுள்ளது. அதற்காக எங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்றால், விஷ்ணம்பேட்டை என்ற ஒரு கிராமம் இருக்கிறது. அந்த levelஐ எல்லாம் ஏற்கெனவே பொறியாளர்கள் எடுத்திருக்கிறார்கள்.

அதேபோல, அணைக்குடி என்று ஒரு கிராமம் இருக்கிறது. அந்த இரண்டு இடத்திலும் படுக்கை அணை என்று பெயர்—எப்போதும் கொள்ளிடத்தில் தடுப்பணை கட்ட முடியாது, அடித்தென்றால் ரூ.3 இலட்சம், ரூ.4 இலட்சம்—எப்போதாவது வெள்ளம் வந்தால் அடித்து தூக்கிக்கொண்டு போய்விடும். அதில் ஒன்றும் இல்லை. அந்த engineers, expertsஐ கேட்டீர்களென்றால் தெரியும். ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் தண்ணீர் overflow ஆகி செல்ல வேண்டும். அந்தமாதிரி வடிவமைத்து விஷ்ணம்பேட்டையிலும் என்னுடைய தொகுதியில் உள்ள அணைக்குடியிலும் தரைமட்டப் பாலம், தடுப்பு கொள்ளிடத்தில் கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இது நிலத்தடி நீர் செறிவூட்டுவதற்கு பயன்படும். கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு தண்ணீர் எடுப்பதற்கு easy ஆக இருக்கும். கிராம விவசாயிகள் 100 அடி, 200 அடி borewell போட்டுள்ள ஆழ்துளை கிணறுக்கு, செறிவூட்டல் மூலமாக பாசன வசதி உறுதி செய்யப்படும்.

### காவிரி வடிநிலக் கோட்டம்

அதேபோல காவிரி வடிநிலக்கோட்டம், காவிரியில் அதே scheme தான். கொள்ளிடத்தில் கட்டப்பட்டது. இது நேமம் திருச்சென்னம்பூண்டி இடையே தளமட்ட சுவர் என்று பெயர், தமிழில் தளமட்ட சுவர் என்று சொல்வார்கள். ஒரு அடி, ஒன்றரை அடி உயரம்தான் கட்டுவார்கள். அப்படி கட்டினால் அந்தப் பாசன வாய்க்காலில் அந்தத் தண்ணீர் ஏறி பாயும். சாதாரண நாட்களில், கோடை நாட்களில் தண்ணீர் தேங்கி, நிலத்தடி நீர் செறிவூட்டப்படும். காவிரியில் விடுபட்ட கிளை வாய்க்கால்கள் மற்றும் பாசன வாய்க்கால்களை, கட்டுமானங்களை சீரமைக்க வேண்டும் என்று துறையினைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், வெண்ணாறு கோட்டம். வெண்ணாற்றின் குறுக்கே மஹாதேவபுரம், இந்தலூர் என்று இரண்டு ஊர்களுக்கிடையில் இதேபோல் தரைமட்ட சுவர் அமைக்க வேண்டும். அப்போதுதான் அந்தப் பகுதியிலுள்ள 10 கிராமங்கள் பாசன வசதி எளிதாகப் பெற முடியும். திருவையாறு தொகுதியிலுள்ள வெண்ணாறு கோட்டப் பாசன பகுதிகளிலுள்ள பழமையான மதகுகள், நீரொழுங்கிகள், குறுக்கு கட்டுமானங்கள் மற்றும் வாய்க்கால்கள் சேதமடைந்துள்ளன. அவற்றை சீரமைக்க துறையின்மூலம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். புள்ளவாய்க்கால் நிறைய நல்ல பாசனம் உள்ள பகுதி. அது பாதரகுடி, செய்யாமங்கலம், கச்சமங்கலம், மகாதேவபுரம் போன்றவற்றிற்குச் செல்லும் வாய்க்கால். தற்போது செல்வதில்லை. அவர்களும் விவசாயத்தை விட்டு விட்டார்கள். எனவே, புள்ளவாய்க்காலை modernise செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வெண்ணாறு கோட்டத்தைச் சேர்ந்த மிக முக்கியமான பிரச்சினை, வெண்ணாறு கோட்டத்தில் கள்ளப்பெரம்பூர் ஏரி என்று ஓர் ஏரி இருக்கிறது. நம்முடைய தஞ்சாவூர் சட்டமன்ற உறுப்பினர் அங்கே வந்தார். இப்போது தன்னார்வத் தொண்டு உறுப்பினர்கள் கிட்டத்தட்ட ஊர் கிராமத்து இளைஞர்களெல்லாம் சேர்ந்து desiltingக்கு பணம் கொடுங்கள் என்று கேட்டார்கள். நான் ரூ.50,000, எங்களுடைய MP ரூ.1 இலட்சம், தஞ்சாவூர் எம்.எல்.ஏ. ரூ.50,000 கொடுத்து, அந்த கள்ளப்பெரம்பூர் ஏரியை சீரமைத்து வருகிறார்கள்; கரை அமைத்து வருகிறார்கள். தனியார் எந்தளவுக்கு அதனை சிறப்பாகச் செய்ய முடியும் என்பது தெரியவில்லை. ஆனால், துறை எடுத்து செய்தால், சுமார் 640 ஏக்கர் பரப்பளவு கொண்ட கள்ளப்பெரம்பூர் ஏரியை சீரமைத்துக் கொடுத்தால், தஞ்சாவூர் நகரத்தில் groundwater நிச்சயமாக recharge ஆகும். கிட்டத்தட்ட 2,662 ஏக்கர் நில பாசனப் பரப்பு பாசன வசதியைப் பெறும். அது உறுதி செய்யப்படும்.

### நீர் மேலாண்மை - தடுப்பணை!

அதேபோல்தான் அல்லூர் அரசக்குடியில் ஓர் ஏரியிருக்கிறது. அதை தூர்வார வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த அல்லூர் அரசக்குடி ஏரிக்கும், கள்ளப்பெரம்பூர் ஏரிக்கும் ஒரு வரலாறு இருக்கிறது. கல்லணையைக் கட்டிய கரிகால பெருவளத்தான், ஏதோ ஒரு போருக்கு சென்றுவிட்டு வரும்போது, அந்தப் பகுதியில் உள்ள விவசாயிகளெல்லாம் ஒன்று திரண்டு, மன்னரை சென்று பார்த்திருக்கிறார்கள். ஐயா, நீங்கள் கல்லணையை கட்டியவுடனேதான் எங்களால் விவசாயம் செய்ய முடியவில்லை. திடீரென்று வெள்ளம் வருகிறது, திடீரென்று வறட்சி வருகிறது. கரிகாலனுடைய பெரிய அறிவு, நீர் மேலாண்மைதன்னுடைய அமைச்சரை அனுப்பி, ஆய்வு செய்துவிட்டு வர சொல்கிறார். ஆய்வு செய்தபோது, அந்தப் பகுதியில் வெறும் மண்தான் இருந்தது; ஒரேயோர் இடத்தில் கச்சமங்கலம் என்ற ஊரில் 7 அடி ஆழத்தில் கீழே ஒரு பெரிய பாறை இருந்திருக்கிறது. மன்னர் கரிகால பெருவளத்தானிடம் கச்சமங்கலம் குறித்து தெரிவித்தார்கள். கரிகாலன் உடனே அந்த இடத்தைப் பார்த்துவிட்டு, இரண்டு வாய்க்கால் வெட்டி, அந்த இடத்தில் ஒரு சிறிய தடுப்பணை அமைத்தார். அன்றைக்கு போட்ட அணைதான் இன்னமும் இருக்கிறது. அதற்குத்தான் உலக பரிசு கொடுத்திருக்கிறார்கள். இரண்டு வாய்க்கால்களை வெட்டி, ஒன்றிற்கு பிள்ளை வாய்க்கால் என்றும், மற்றொன்றிற்கு ஆனந்த காவிரி என்றும் பெயர் வைத்தார் கரிகாலன். அப்படி ஆனந்த காவிரியினுடைய end தான் கள்ளப்பெரம்பூர் ஏரி, நம்முடைய தஞ்சாவூர் எம்.எல்.ஏ வந்த பார்த்தது. இந்தப் பக்கம் வருவது, அல்லூர் அரசக்குடி ஏரி. அந்த ஏரியையும் நாம் சீர்படுத்த வேண்டும். இன்று வரையில் அந்தப் பகுதியிலுள்ள விவசாயத்திற்கு மிக கரிகால பெருவளத்தான் கட்டிக் கொடுத்த அந்த ஏரிகள்தான் பாசன வசதியுடன் டெல்டாவை மிகச் சிறப்பாக வைத்திருக்கிறது என்பது தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

### கல்லணை கால்வாய் ஏரிகள்

அடுத்து, கல்லணை கால்வாயில் கடம்பங்குடி, தொண்டாம்பட்டி, சோழகன்பட்டி, பொன்வளர்ந்தான் பட்டி, இந்தலூர் என்று 5 கிராமங்கள் இருக்கின்றன. 5 ஏரிகள் இருக்கின்றன. அந்த ஏரிகள் பட்டியலில் இருக்காது; எந்த divisionல் இருக்காது. Unclassified tanks என்று வைத்து உங்களுடைய துறையில் சொல்வார்கள். அவற்றிற்கு தண்ணீர் விடமாட்டார்கள். மற்ற எந்த ஊராக இருந்தாலும், சொந்தக்காரனாக இருந்தாலும் சரி, தண்ணீர் விடமாட்டார்கள். ஒன்று வீரமங்கலம், ஆதி திராவிடர் தெருவில் இருக்கிறது. நான் பேசி, பேசி, வருடா வருடம் சமரசம் செய்து தண்ணீரைவிட சொல்வேன். அவர்களும் தண்ணீரை விட்டுவிடுவார்கள். Unclassified tanksஐ துறையின்மூலம் ஏதாவது ஒன்றில் சேர்க்க வேண்டும். அப்படி சேர்கிறபோதுதான், நீர்ப்பாசனம் வசதி வரும். அப்படி வருகின்றபோது, அந்தப் பகுதியில் விவசாயம் செழிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு MLA நிம்மதியாக, இங்கேயிருக்கிற அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் சொல்கிறேன், ஊருக்குள் போகவேண்டுமென்றால் உள்ளாட்சித் துறை நன்றாக இருக்க வேண்டும். உள்ளாட்சித் துறை கண்டிப்பாக நன்றாக இருக்க வேண்டும். P.O. நன்றாக இருக்க வேண்டும். எங்கள் கோ.சி. மணி அண்ணன் சொல்வார், ஒரு மாவட்டம் சிறப்பாக இருக்க வேண்டுமென்றால் மாவட்ட ஆட்சித் தலைவர் நன்றாக இருக்க வேண்டும், அடுத்தது P.O. நன்றாக இருக்க வேண்டும், அடுத்தது B.D.O நன்றாக இருக்க வேண்டும். மிகச்சிறந்த தீர்க்கதரிசி அவர். அவர் சொன்னதைப் பார்த்தால், நாங்கள் அவரிடம் எதுவும் கேட்கமாட்டோம். நல்ல P.O. எங்கள் தஞ்சாவூர் மாவட்டத்திற்கு நியமித்தார். பிரமாதமாக வேலை வாங்குவார். நிறைய விஷயங்கள் அவரிடம் இருக்கின்றன. நான் எல்லா மாவட்டத்திற்கும் அவருடன் tour செல்வேன். மிக அற்புதமாக இரண்டுநாள் இங்கே விவாதத்தை நடத்தினார்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்தில் உள்ளாட்சித் துறைகள் மிகச் சிறப்பாக இயங்கி இருக்கின்றன. நினைவில் வாழும் கோ.சி. மணி அவர்கள். திராவிட மாடல் நாயகர், கழகத் தலைவர் அவர்கள், இ. பெரியசாமி அவர்கள். இ. பெரியசாமி அவர்களுக்கு மிகப்பெரிய record என்னவென்றால் நாங்கள் எல்லாம் தேர்தல்களை எதிர்கொள்ள அவர்தான் காரணம். ஒன்றுமில்லை, தலைவரிடம் பேசினார். 4,000 கோடி வாங்கினார், அடுத்த வருடம் 4,000 கோடி மொத்தம் 8,000 கோடி. முதலமைச்சரின் சாலைத் திட்டம் என்று சொல்லி, Highways standardல், இன்றைக்கும் எந்த ஊருக்குச் சென்றாலும் வெள்ளைக்கோடு போட்டு மிகச் சிறப்பாக—இன்றைக்கு அசோக்குமார் அவர்கள் பேராவூரணி தொகுதியில் வெற்றபெற முடியுமா, வெற்றிபெற்றார் என்றால் அந்த road தான். அண்ணாதுரை வெற்றிபெற்றார், வெற்றிபெற்றார் என்றால் அந்த road தான். ஒன்றேயொன்றில் தான் நாங்கள் ஏமாந்துவிட்டோம். நான் வெற்றிபெற்றாலும் அதேபோல வைத்திலிங்கம் அவர்கள் வெற்றி பெற்றாலும் அதற்கெல்லாம் காரணம் அண்ணன் இ. பெரியசாமி அவ்வளவு சிறப்பாக அந்தச் சாலைகள் உள்ளன. தற்போது நீங்கள் 7,000 கோடி ஒதுக்கியுள்ளீர்கள். நன்றாக சாலையை போடுங்கள்.

நாங்கள் என்ன செய்தோம் என்றால், ஒரு கிலோமீட்டர்தான் எடுத்தோம். ஒரு கிலோமீட்டர் உள்ள சாலைகளை எடுத்தோம். தற்போது நீங்கள் 800, 900, 750, 850 மீட்டர் உள்ள சாலைகள் எல்லாம் இருக்கிறது. அதை நீங்கள் அவசியமாக எடுத்தீர்கள் என்றால்தான், அதனை relaxation செய்யவேண்டும். ஒரு கிலோமீட்டருக்கு கீழேயுள்ள சாலைகளை எடுத்து—கிராமச் சாலைகள் என்பது யாருமே போடவில்லை. இப்போதுதான் முதன்முறையாக கடந்த முறை தேர்தல் வருகிறது என்று எங்கள் அண்ணன் இ. பெரியசாமி போட்டார்கள். குறைவாக உள்ளதற்கும் போட வேண்டும்.

ஒரு comparison இந்து பத்திரிகையில் கடந்த 16 ஆம் தேதியன்று ஒரு article வந்திருக்கிறது. அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். நீர்வளத் துறைக்கு 15 CE இருக்கிறார்கள். 39 SEமேற்பார்வை பொறியாளர்கள், 152 EEசெயற்பொறியாளர்கள், 508 உதவி செயற்பொறியாளர்கள் பேர் இருக்கிறார்கள். ஆனால், அந்த 9,264 கோடிதான் நிதி கொடுத்திருக்கிறீர்கள். அதை implement செய்வற்கு இவ்வளவு பேர். அதற்கடுத்து நெடுஞ்சாலைத் துறையில் பார்த்தீர்கள் என்றால் 10 CE இருக்கிறார்கள், 35 SE இருக்கிறார்கள், 169 EE இருக்கிறார்கள், 538 AE இருக்கிறார்கள். ஆனால், அதை implement செய்வற்கு 21,524 கோடி நிதி ஒதுக்கியிருக்கிறீர்கள்.

ஆனால், ஊரக வளர்ச்சித் துறையில் கிட்டத்தட்ட 40,000 கோடி நிதி ஒதுக்கியிருக்கிறீர்கள். ஆனால் CE இரண்டே பேர்தான். சென்னையில் இருக்கிறார்கள். அதற்கடுத்தது மூன்று பேர் SE, அதற்கடுத்து 45 EE, அதற்கடுத்து 191 AE இருக்கிறார்கள். உண்மையில் இந்தத் திட்டம் failure ஆகிறது, சரியாக நடக்கவில்லை, வீடு பெயர்ந்து விழுகிறது என்றால் அதற்கெல்லாம் காரணம் EEக்களெல்லாம் இல்லை. நீங்கள் நிதியை உயர்த்த வேண்டும். நெடுஞ்சாலைத் துறை மற்றும் பொதுப் பணித் துறையில் இருப்பதைப்போல உள்ளாட்சித் துறைக்கும் நிதியை உயர்த்த வேண்டும். அதேபோல நெடுஞ்சாலைத் துறையில் நாம் தரக்கட்டுப்பாடு வைத்திருக்கிறோம். ஆனால் உள்ளாட்சித் துறையில் தரக்கட்டுப்பாடு இல்லை. ஆனால் உள்ளாட்சித் துறையில் தரக்கட்டுப்பாடு வேண்டும். உள்ளாட்சித் துறையில் தனியாக engineer தரக்கட்டுப்பாடு செய்யவேண்டும்.

அதேபோல உதவி செயற்பொறியாளர் twowheeler ல் வருகிறார்கள். அதனால் அவர்களுக்கு ஒரு jeep கொடுக்கவேண்டும். ஒரு jeep கொடுத்து, நீங்கள்தான் work அதிகம் அறிவித்துள்ளீர்கள். வீடுகள் எல்லாம் கட்ட வேண்டியிருக்கிறது. 70,000 வீடுகள் கட்டப்படும் என்பதை ஒரு இலட்சமாக சொல்ல வேண்டும். அதை நான் பார்த்துக்கொள்கிறேன். நகர்ப்புறத்தை ஒட்டி periurban village என ஊர்கள் இருக்கின்றன. அங்கு அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாமல் இருக்கிறது.

Group house என்று சொன்னார்கள் அதையெல்லாம் பராமரிக்க வேண்டும். என்னுடைய திருவையாறு தொகுதியில் மட்டும்தான் Union office பழைய காங்கிரஸ் காலக் கட்டடமாக இருக்கிறது. மீத அனைத்து Union officeஐயும் நாங்கள் எங்கள் ஆட்சிக் காலத்தில் புது அலுவலகம் கட்டியிருக்கிறோம். அதனால் திருவையாறு தொகுதிக்கு ஒரு அலுவலகம் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய நண்பர் கோபித்துக்கொள்வார். சுற்றுலாத் துறையில் இரண்டே இரண்டு உள்ளது. வேறு ஒன்றும் இல்லை. முடித்துவிடுகிறேன்.

சுற்றுலாத் துறையில் கல்லணைதான் அதிகமாக சுற்றுலாப் பயணிகள் வருகிற பகுதி. அது என்னவென்றால் சிறிய இடம். கொஞ்சமாக வருகிறார்கள். திருச்சியிலிருந்து அதிகமாக வருகிறார்கள். என்னுடைய வேண்டுகோள் அங்கு பொதுப் பணித் துறையினுடைய இடம் நிறைய இருக்கிறது. நிறைய வயல்களாக இருக்கிறது. இப்போது நட்டுக்கொண்டிருக்கிறார்கள். விவசாயம் செய்துகொண்டிருக்கிறார்கள். நீங்கள் துறையின் மூலமாக எடுத்து நல்ல புல் தரை, கல்லணையில் light அலங்கார மின் விளக்கு, infra structure அதாவது latrine, bathroom இவையனைத்தும் கட்டவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், தென்பெரம்பூர் என்று என்னுடைய தொகுதியில் ஓர் ஊர் இருக்கிறது. அந்த இடத்தில் என்னவென்றால் வடவாறு, வெண்ணாறு, வெட்டாறு மூன்றும் பிரிகிற இடம். தஞ்சாவூரிலிருந்து 8 கி.மீ.ல் உள்ளது. ஏராளமான நபர்கள் வருகிறார்கள். ஆனால் அங்கு எந்த வசதியும் இல்லை. அதை ஒரு சுற்றுலாத் தலமாக நீங்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல், கச்சமங்கலத்தில் ஒரு சிறிய சிறுவர் அமைக்கலாம். சிறிய இடம் அது. அதை நன்றாக, சிறப்பாக புதிய சுற்றுலாத் தலமாக அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய கலைஞர் அவர்கள் மிகப்பெரிய தீர்க்கதரிசி. அவர்களிடம் நான் இதுபோன்று இருக்கிறது என்று ஒரு மனு கொடுத்தேன். அது இருக்கிறது. அது என்னவாயிற்று என்று கேட்டார். அதில் எழுதினார். அரசர் கல்லூரியின்கீழ் ஒரு துறை இருக்கிறது. நம்முடைய தங்கம் தென்னரசு அவர்களுக்கு எல்லாம் நன்றாகத் தெரியும். அந்த collegeஐப் பற்றி முழுவிவரமும் தெரியும். கலைஞர் அவர்கள் என்ன செய்தார்கள் என்றால் ஒரு துறையை தூக்கி, திருவையாறு அரசு இசைக் கல்லூரியாக அறிவித்தார். அந்தக் கல்லூரியில் இன்றைக்கு பல்லாயிரம், 2,000 நபர்கள் படிக்கிறார்கள். அதில் ஏராளமான குறைபாடுகள் உள்ளன. கடந்த வருடம் hostel வாங்கிக்கொடுத்தேன். ராஜ்மோகன் அதை களஆய்வு செய்து ladies hostel இல்லை என்று நினைக்கிறேன். அதிகப் பாடப்பிரிவுகள் வேண்டுமென்று கேட்கிறார்கள். எனவே, அதையெல்லாம் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு துரை.சந்திரசேகரன் உரையாற்றினார்.